O.S.No. : 85/2021

Dated: 24.02.2026

**பி.வா.சா.1: சிவலிங்கம்** , **த/**பெ. ஜோகி

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. எனது பிறந்த தேதி 01.02.1964 ஆகும். நான் B.A. படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் சரளமாக எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் 1982 ஆம் ஆண்டு என்ன படித்து வந்தேன் என்றால் பன்னிரெண்டாம் வகுப்பு படித்து வந்தேன். நான் 12 ஆம் வகுப்பை கோயம்புத்தூர் வடக்கு மாநகராட்சி பள்ளியில் படித்தேன் என்றால் சரிதான். நான் அப்போது கோயம்புத்தூரில் உள்ள எனது சித்தப்பா N.S. ராமன் என்பவர் வீட்டில் தங்கிதான் படித்து வந்தேன் என்றால் சரிதான். நான் அவ்வாறு படித்து வரும்போது எனது சித்தப்பா N.S. ராமன் என்பவர்தான் என்னை பராமரித்து வந்தார் என்றால் சரிதான்.

2. எனது தந்தைவழி தாத்தாவின் பெயர் சேலையன் என்றால் சரிதான். அவர் வாத்தியராக பணிபுரிந்து வந்ததால் அவரை சேலை வாத்தியார் என்றும் அழைப்பார்கள் என்றால் சரிதான். அவருக்கு N.S. ஜோகி, N.S. ராமன் மற்றும் N.S. கிருஷ்ணன் ஆகிய மூன்று வாரிசுகள் என்றால் சரிதான். ஆதியில் தாவா சொத்துக்கள் சேலை வாத்தியார் பெயரில்தான் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. எனக்கு தாவா சொத்தின் ஆதி அம்சங்கள் தெரியாது என்றால் சரியல்ல, தாவா சொத்து ஆதியில் எனது பாட்டி செவணியம்மாள் பெயரில்தான் இருந்தது. செவணியம்மாள் தாவா சொத்தினை கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். அந்த பத்திரத்தின்படி சொத்தினை யாரிடமிருந்து செவணியம்மாள் கிரையம் பெற்றுள்ளார் என்றால் A.M. நஞ்சன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார். அந்த A.M. நஞ்சன் என்பவர் யாரிடமிருந்து அந்த சொத்தினை கிரையம் பெற்றார் என்ற விவரம் எனக்கு

தெரியுமா என்றால் தெரியாது.

3. வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்படி A.M. நஞ்சன் என்பவர் சேலை வாத்தியாரிடமிருந்து மேற்படி சொத்தினை கிரையம் பெற்றதாக கண்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கிற்காக தெரியாது என்று கூறுகிறேன் என்றும், வா.சா.ஆ.1 ஆவணத்தில் சேலை வாத்தியார் கிரையம் கொடுத்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல, அந்த கிரையப்பத்திரம் 1971 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது, நான் 1964 ஆம் ஆண்டு பிறந்ததால் கிரையப்பத்திரம் ஏற்படுத்தப்பட்ட தேதியில் எனக்கு சிறு வயது என்பதால் அந்த விவரங்கள் தெரியவில்லை. செவணியம்மாள் எந்த தேதியில் தாவா சொத்தினை கிரையம் பெற்றார் என்றால் 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதி கிரையம் பெற்றார். வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தின்படி 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 ஆம் தேதிதான் செவணியம்மாள் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான், நான் தவறுதலாக தேதியை 15 என்று கூறிவிட்டேன்.

4. வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் வாதி N.J. சந்திரன் என்பவர் முதல் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தை தயார் செய்தவர் சக்கோலே கவுடர் மகன் N.S. நஞ்சன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1982 ஆம் வருடத்தில் சேலை வாத்தியாரின் வாரிசுகள் தாவா சொத்தில் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல, நானும், எனது தாயாரும், எனது பாட்டியும்தான் அங்கு குடியிருந்தோம். தாவா சொத்தினை கிரையம் பெற்ற பிறகு சேலை வாத்தியாரின் வாரிசுகளும், எனது பாட்டியும்தான் தாவா சொத்தில் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல, எனது சகோதரர்கள், எனது தாயார் மற்றும் எனது பாட்டி மட்டும்தான் தாவா சொத்தில் குடியிருந்து வந்தோம்.

5. எனது பாட்டி செவணியம்மாளை அவரது வாரிசுகளான N.S. ஜோகி, N.S. ராமன் மற்றும் N.S. கிருஷ்ணன் ஆகியோர்கள் மாற்றி மாற்றி பராமரித்து வந்தார்கள் என்றால் சரிதான், எனது பாட்டிக்கு யாரிடம் விருப்பம் இருந்ததோ அவர்கள் வீட்டில் மாறி மாறி வசித்து வந்தார். எனது தந்தை 02.07.1979 தேதியில் இறந்தார். எனது தாத்தா எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எனது தாத்தா 1980 ஆம் வருடம் இறந்தார் என்றால் சரிதான். எனது பாட்டி செவணியம்மாள் 1992 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். 19.07.1998 ஆம் ஆண்டு சேலை வாத்தியாரின் வாரிசுகளான N.S. ஜோகி, N.S. ராமன் மற்றும் N.S. கிருஷ்ணன் ஆகியோருக்கிடையே பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் சரிதான்.

6. அந்த பாகப்பிரிவினையின்போது ஜோகி உயிருடன் இல்லை என்பதால் தாவா சொத்தானது வாதி N.J.சந்திரன், 1 ஆம் பிரதிவாதி N.J.சுப்ரமணி மற்றும் 2 ஆம் பிரதிவாதி N.J.சிவலிங்கம் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வாதி தனது பெயரில் மின் இணைப்பு பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி பாகப்பிரிவினை செய்யப்பட்டது தொடர்பாக நான், வாதி மற்றும் 1 ஆம் பிரதிவாதி ஆகியோர் கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் மேற்படி பாகப்பிரிவினை ஏற்பட்டது தொடர்பான ஆவணம் என்றும் அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையது மற்றும் வாதி மற்றும் 1 ஆம் பிரதிவாதியுடையது என்றால் சரிதான். (**அந்த 19.07.1998 தேதியிட்ட பதிவு செய்யப்படாத செட்டில்மண்ட் ஆவணத்தின் ஒளி நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

7. வாதி கோயம்புத்தூரில் பொது சுகாதாரத்துறையில் பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். வாதி அவ்வாறு பணிபுரிந்த வந்த சமயத்தில் கோயம்புத்தூரிலிருந்து உதகமண்டலம் வந்து தாவா சொத்தினை பராமரித்து

வந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில்தான் வாதி, வாதியின் மகன் மற்றும் எனது திருமணங்கள் நடைபெற்றது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.4 ஆவணம் குறித்து எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2000 ஆம் வருடத்தில் தெரியவந்தது. நான் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் தேதி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, செப்டம்பர் மாதம் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.4 ஆவணம் என்ன பத்திரம் என்றால் ஒப்பந்த பத்திரம் ஆகும். 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பி.வா.சா.ஆ.4 ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட சமயத்தில் எனக்கு என்ன வயதிருக்கும் என்றால் அப்போது நான் 12 ஆம் வகுப்பு படித்து வந்தேன், அப்போது எனக்கு 17 வயது முடிந்திருந்தது.

8. பி.வா.சா.ஆ.4 ஒப்பந்தமானது எனது பாட்டி செவணியம்மாள் என்னுடன் ஒப்பந்தம் ஏற்படுத்தியதாக உள்ளது என்றால் சரிதான். அந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட தேதியில் நான் இளவராக இருந்தேன் என்றால் சரியல்ல, அப்போது எனக்கு 17 வயது முடிந்து 18 வயது ஆகியிருந்தது. பி.வா.சா.ஆ.4 ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட தேதியில் எனக்கு 18 வயது பூர்த்தி அடையவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஒப்பந்தத்தில் நான் எனது பாட்டிக்கு உதவி செய்ததாக கூறப்பட்டுள்ளது அவ்வாறு நான் என்ன உதவி செய்தேன் என்றால் எனது பாட்டிக்கு வரும் பென்ஷன் தொகையை என்னிடம் கொடுப்பார், எனது பாட்டிக்கு தொகை விவரங்கள் தெரியாததால் அவரிடமிருந்து பணத்தை பெற்று நான் பராமரித்து வந்தேன்.

9. பி.வா.சா.ஆ.4 ஒப்பந்தத்தில் கூறியுள்ளபடி எனது பாட்டி இறக்கும்வரையில் எனக்கு கிரையப்பத்திரம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஒப்பந்தத்தில் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் எனது அண்ணன் N.J.சந்திரன்

என்பவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். பி.வா.சா.ஆ.4 ஒப்பந்தத்தில் N.J.சந்திரன் என்ற ஒருவர் மட்டும்தான் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஒப்பந்தத்தில் உள்ள சாட்சி கையொப்பம் வாதியுடையதல்ல என்றால் சரியல்ல, அது வாதியுடையதுதான். தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.4-ல் உள்ள கையொப்பத்திற்கும், வா.சா.ஆ.8-ல் உள்ள வாதியின் கையொப்பத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான், வா.சா.ஆ.8 ஆவணமானது 1998-ல் ஏற்படுத்தப்பட்டது, பி.வா.சா.ஆ.4 ஆவணமானது 1982 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது என்பதால் கையொப்பத்தில் வித்தியாசம் உள்ளது.

10. தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் சாட்சியின் கையொப்பத்திற்கு பிறகு தகப்பனார் பெயர் மற்றும் முகவரி எழுதியுள்ளதற்கு முன்பு அடித்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், தகப்பனார் பெயர் என்ற விவரம் அடித்து எழுதப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.4 ஆவணம் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில்தான் செவணியம்மாள் பெயரில் தாவா சொத்து கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு செவணியம்மாள் தாவா சொத்தினை கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தில் உள்ள N.J.சந்திரன் என்பவரது சாட்சி கையொப்பத்தையும், பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள சாட்சி கையொப்பத்தையும் ஒப்பிட்டு பார்த்தால் உண்மை தெரியவரும் என்றால் சரிதான்.

11. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள சாட்சி கையொப்பம் வாதியுடையதல்ல என்றால் சரியல்ல. அந்த பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள சாட்சி கையொப்பத்தை 1982 ஆம் ஆண்டு செவணியம்மாள் கிரையம் பெற்ற ஆவணத்தில் உள்ள சாட்சி கையொப்பத்துடன் ஒப்பிட்டு பார்த்து நிபுணர் அறிக்கை பெற எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. பெள்ளன்

மகன் அர்ஜுனன் என்பவர் யார் என்றால் அவர் எனது அத்தை மகன் ஆவார். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் எழுதியது என்று கையொப்பம் செய்துள்ளது, மேற்படி பெள்ளன் மகன் அர்ஜுனன்தான் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

12. நான் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை வழக்கிற்காக தற்போது தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை எழுதியது அர்ஜுனன் என்பவர்தான் என்றும், அவ்வாறு அந்த ஆவணம் உண்மையாக எழுதப்பட்டிருந்தால் வா.சா.ஆ.1 ஆவணத்தை தயார் செய்த நபர்தான் இந்த ஆவணத்தையும் தயார் செய்திருக்கவேண்டும் என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.4 ஆவணம் சட்டப்படி செல்லாது என்பதால் அதன் அடிப்படையில் நான் எந்தவித உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்து ஜோகி என்பவரது வாரிசுகளின் கூட்டு அனுபவத்தில் உள்ளதால் நான் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தின் அடிப்படையில் எந்தவித உரிமையும் கோர இயலாது என்றால் சரியல்ல, நாங்கள் கூட்டு அனுபவத்தில் இருக்கவில்லை.

13. நான் தற்போது வழக்கிற்காக பொய்யாக கூட்டு அனுபவத்தில் இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றும், தாவா சொத்து பொறுத்து எனக்கு எந்தவித தனிப்பட்ட உரிமையும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் ஒரு பகுதியில் 1 ஆம் பிரதிவாதி சுப்ரமணி என்பவரின் வீடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து கூட்டு அனுபவத்தில்தான் இருந்து வந்தது என்றும், கொரோனா காலக்கட்டத்தில் வாதி தாவா சொத்திற்கு வர இயலாத சூழ்நிலையை பயன்படுத்தி நான் தாவா சொத்தின் அமைப்பை மாற்ற முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல, வாதி 40 வருடங்களாக தாவா சொத்திற்கு வரவில்லை. நான் தாவா சொத்தில் உள்ள வாதியின் பாகத்தை இடித்து கட்ட முயற்சி செய்ததால் வாதி என்மீது காவல் நிலையத்தில் புகார்

கொடுத்துள்ளார் என்றால் புகார் கொடுத்தது உண்மைதான், ஆனால் அது எனது பாகம் ஆகும், எனது தாயாருக்கு கழிவறை வேண்டும் என்பதால் நான் அதை இடித்து கட்டினேன்.

14. நான் கழிவறை கட்டுவதாக கூறி முழு வீட்டினையும் இடித்துவிட்டேன் என்றால் சரியல்ல, நான் வீட்டின் ஒரு பாகத்தைதான் இடித்தேன், ஆனால் வாதி காவல் துறையில் புகார் கொடுத்ததால் காவல் துறையினர் மேற்கொண்டு எந்தவிதமான கட்டுமானமும் செய்யக்கூடாது என்று கூறிவிட்டார்கள், அதனால் நான் எந்தவித கட்டுமானமும் செய்யவில்லை, அந்த சமயத்தில் அதிக மழை பெய்ததால் அது மண் சுவர் என்பதால் மழையால் சுவர் அனைத்தும் இடிந்து விழுந்துவிட்டது. நான் தற்போது கூறும் விவரமான சுவர் மழையால் இடிந்துவிட்டது என்ற விவரத்தை எனது எதிர்வழக்குரை மற்றும் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் இல்லை.

15. நான் தற்போது உண்மையை மறைப்பதற்காக சுவர் தானாக இடிந்துவிட்டது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 புகைப்படங்களில் மழை பெய்ததாக தெரியவில்லை என்றால் அந்த புகைப்படங்கள் எடுக்கப்பட்ட சமயத்தில் மழை இல்லாமல் இருந்திருக்கும். நான் வீடு கட்டும்போது வாதி 3 ஆம் பிரதிவாதியிடம் ஆட்சேபனை கடிதம் கொடுத்தார் என்றால் சரிதான். அவ்வாறு கொடுத்த ஆட்சேபனையின் அடிப்படையில் 3 ஆம் பிரதிவாதி எனக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 அறிவிப்புதான் அது என்றால் சரிதான்.

16. நான் வீட்டை கட்டுவதற்கு அனுமதி ஏதாவது பெற்றேனா என்றால் பஞ்சாயத்தில் அனுமதி பெற்றேன். நான் எந்த ஆவணத்தை வைத்து அனுமதி

பெற்றேன் என்றால் வீட்டு வரி ரசீதை வைத்து அனுமதி பெற்றேன். வீட்டு வரி ரசீது சேலை கவுடர் பெயரில்தான் இருந்தது என்றால் சரியல்ல, முதலில் வீட்டு வரி ரசீது N.S.ஜோகி பெயரில் இருந்தது, அதன் பிறகு எனது தாயாரான பெள்மாதியம்மாள் பெயரில் இருந்தது. வீட்டு வரி ரசீது கட்டிட அனுமதி பெறும்போது யார் பெயரில் இருந்தது என்றால் வீட்டு வரி ரசீது அப்போது எனது பெயரில் இருந்தது. எனது பெயரில் தனிப்பட்ட உரிமை இல்லாத நிலையில் எவ்வாறு வீட்டு வரி ரசீதை எனது பெயருக்கு மாற்றினேன் என்றால் எனது பாட்டி எனக்கு எழுதிக்கொடுத்த ஒப்பந்தத்தை வைத்து வீட்டு வரி ரசீதை எனது பெயருக்கு மாற்றினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்த பத்திரத்தை வைத்துதான் நான் வரி ரசீதில் எனது பெயரினை மாற்றினேனா என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.4 ஆவணம் மற்றும் வா.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ள ஒப்பந்தப்பத்திரத்தில் எது உண்மையானது என்றால் இரண்டும் ஒன்றுதான். நான் கூறுவதுபோல பி.வா.சா.ஆ.4 ஆவணமும், வா.சா.ஆ.7 ஆவணத்துடன் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்த நகலும் ஒரே ஆவணம் இல்லை என்றும், வா.சா.ஆ.7 ஆவணத்துடன் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் 2 வது சாட்சி கையொப்பம் பொய்யாக போடப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல, அது பொய் அல்ல.

17. 1 ஆம் பிரதிவாதி சுப்ரமணி என்பவர் அரசு அலுவலராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். 3 ஆம் பிரதிவாதிக்கு எனது பெயரில் தனிப்பட்ட முறையில் வரி விதிப்பில் பெயர் சேர்க்க அதிகாரம் கிடையாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கட்டிடம் கட்ட அனுமதி கோரி விண்ணபித்த பிறகு அனுமதி வழங்கப்பட்டதா என்றால் பஞ்சாயத்தில் அனுமதி வழங்கப்பட்டது. அவ்வாறு அனுமதி எந்த தேதியில் வழங்கப்பட்டது என்றால் தேதி ஞாபகம் இல்லை, வீடு கட்டிக்கொண்டிருக்கும்போதே 2021 ஆம் ஆண்டு அனுமதி வழங்கப்பட்டது. எனது எதிர்வழக்குரையில் எனக்கு கட்டிடம் கட்ட

அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் அவ்வாறு எனது எதிர்வழக்குரையில் எந்தவித சங்கதியும் கூறவில்லை என்றால் சரிதான்.

18. அவ்வாறு நான் உண்மையாக கட்டிட அனுமதி பெற்றிருந்தால் அது குறித்து எனது எதிர்வழக்குரையில் கூறியிருப்பேன் என்றும், அது தொடர்பான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றும் சொன்னால் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை, ஆனால் மாவட்ட ஆட்சியரிடம் கட்டிட அனுமதி கோரி விண்ணப்பம் செய்துள்ளேன். நான் அவ்வாறு கட்டிட அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டியுள்ளது சட்ட விரோதமானது என்றால் சரியல்ல, பஞ்சாயத்தில் நான் கட்டிட அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளதால் என்னை கட்டிடம் கட்டிக்கொள்ள சொன்னார்கள்.

19. நான் பஞ்சாயத்தில் விண்ணப்பம் செய்ததால் கட்டிடம் கட்டிக்கொள்ளலாம் என்று என்னிடம் கூறியதாக தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறும் சங்கதி உண்மை என நிரூபிக்க நான் 3 ஆம் பிரதிவாதியை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தற்போது அவர் பணியில் இல்லை. நான் கூறுவதுபோல எந்த அலுவலரும் என்னிடம் வீடு கட்டிக்கொள்ள கூறவில்லை என்றும் நான் வழக்கிற்காக அவ்வாறு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 பட்டா ஆவணத்தை எவ்வாறு பெற்றேன் என்றால் நத்தம் பூமிக்கு தொடர்ந்து 3 வருடங்கள் வரி கட்டினால் பட்டா கொடுக்கப்படும் என்ற அடிப்படையில் பெற்றேன்.

20. நான் போலியான ஆவணத்தின் அடிப்படையில் வரி செலுத்தி வந்து அந்த வரி ரசீதின் அடிப்படையில் பட்டா பெற்றுள்ளதால் பி.வா.சா.ஆ.1 பட்டா செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் அரசாங்க அலுவலர்களுடன் சேர்ந்து போலியான ஆவணத்தை உருவாக்கி அதன் அடிப்படையில் பி.வா.சா.ஆ.1 பட்டாவினை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நானும், எனது அண்ணன் 1 ஆம் பிரதிவாதியும் சேர்ந்து சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு வாதியின் உரிமையை பறிக்க முயற்சி செய்ததால் வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் போலியான ஆவணங்களை தாக்கல் செய்து பொய்யாக வழக்கு நடத்தியுள்ளதால் என்மீதும், 1 ஆம் பிரதிவாதி மீதும் சட்டரீதியான நடவடிக்கையும் எடுக்கவேண்டும் என்றால் சரியல்ல, அது உண்மையான ஆவணம்தான்.

**மறுவிசாரணை**: இல்லை

Loganathan Prakash

Digitally signed by Loganathan Prakash
Date: 2026.02.24 20:02:41 +0530